அசல் வழக்கு எண்.255/18 வா.சா.1 திரு.மெய்யப்பன் த/பெ:பேலு தேதி : 07.10.2021

வாதி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

பட்டா எண் 934-ல் கண்டுள்ள சொத்திற்கு நான் உரிமைகொண்டாட வில்லை. 934-ம் நம்பர் பட்டாவில் கண்டுள்ள சொத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் 9-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.2 பட்டா எண்.934-ல் மலையப்பன்மகன் வேலு என்பவர் பெயரில் பதிவாகியுள்ளது என்று சொன்னால் சரிதான். அதில் புல எண்.363/22, 363/24 எனக்கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.3-ல் நில உடைமையாளர் பெயர் வீராயி என்றும் அவரது கணவர் பெயர் வேலு என கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதில் கண்டுள்ள புல எண். 363/22, 363/24 என்று சொன்னால் சரிதான். இந்த சொத்து வீராயி என்பவருக்கு அவருடைய கணவர் வழியாக கிடைத்தது என்க்கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.363/24-க்கு நான் உரிமை கொண்டாடுகிறேன். சர்வே எண்.363/24-க்கு என் பெயரிலோ என் அப்பா பெயரிலோ பட்டா உள்ளதா என்றால் என் அப்பா மெ.வேலு பெயரில் உள்ளது. வழக்குச் சொத்து 1-ம் பிரதிவாதியின் யெரில் ஏற்பட் அவருடைய அனுபவ்த்தில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல என்னுடைய அனுபவத்தில்தான் இருந்து வருகிறது. தாவா சொத்தை அரசு என் அப்பாவிற்கு கொடுத்தது. வழக்குச் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ரசீது பட்டா எண். 934-ல் கண்டுள்ள சொத்துக்களுக்கு அல்ல என்று சொன்னால் சரியல்ல. பட்டா எண். 934-ல் கண்டுள்ள சொத்து எதுவும் எனக்கோ என் தகப்பனருக்கோ பாத்தியப்பட்டது என்று சொன்னல் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் 2 வா.சா.ஆ.3 மற்றும் 4 பார்த்து போலியாக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்தை அபகரிப்பதற்காக வா.சா.ஆ.1 மற்றும் 2 தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கு வீராயி பெயரிலுள்ள பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்து அது நீதிமன்றத்தில் தீர்வு கண்டுகொள்ள முடிக்கப்பட்டுவிட்டது. வழக்குச் சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் அது அவர்களுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக வழக்குச் சொத்து எனது அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நான் கோரும் பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கதக்கல்ல என்று சொன்னால் சரியல்ல.